1. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஈ.) மின்சாரப் பற்றாக்குறை குறித்து அறிக்கை கோரல்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: நான் இதிலே நுழையவில்லை; நம்முடைய மின்துறை அமைச்சர் அவர்கள் கேரளா சென்று வந்திருக்கிறார்கள். கிராமங்களில் மின்சாரப் பற்றாக்குறையினால் மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல செய்தியை மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால் இப்போதே அறிக்கையைப் படித்து விடுகிறேன்.

5. அறிக்கை அளித்தல் (தொடர்ச்சி)

ஆ. கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் வாங்குவது குறித்து.

கேரள மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டிற்கு மின்சாரம் வாங்குவதற்கான ஒரு வருட ஒப்பந்தம் இன்றோடு (12—2—80) காலாவதி ஆகிறது. நான் கேரள மாநில மின்துறை அமைச்சருடன் 10-2-80, 11-2-80 ஆகிய தினங்களில் பேச்சு வார்த்தை நடத்தினேன். இதன் மூலம் இன்று முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு இம் மாநிலம், கேரள மாநிலத்திலிருந்து மின்சாரம் பெறுவதற்கு ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவ்வொப்பந்தத்தின் கீழ் கேரள மாநிலம் அம் மாநிலத்தின் சொந்த மின் தேவை மற்றும் கர்நாடக மாநிலத்திற்கு ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தின் படி கொடுக்க வேண்டிய மின்சாரம் போக அனைத்து உபரி மின்சாரத்தையும் தமிழ்நாட்டிற்கு வழங்கும்.

2. தமிழ்நாடு கேரள மாநிலத்திற்கு மத்திய ஆயத் தீர்வை உட்பட யூனிட் ஒன்றுக்கு 28-பைசா மின்கட்டணம் செலுத்தும்.

3. இந்த ஒப்பந்தம் 12-2-80 முதல் மூன்றாண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். ஆனால் இரண்டு மாநிலங்களும் விருப்பப்பட்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மின் கட்டணத்தைப் பொறுத்தமட்டில் மறு பரிசீலனை செய்யலாம்.